## தலைப்பு 282 – நீர்ப்பாசனத் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 ஜூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூலை 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான போக்குவரத்து அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான என்னால் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 முற்பணக் கொடுப்பனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 02 ஆந் திகதி சேவையை விட்டுச் சென்றுள்ள மாத்தளை பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றிய சாரதி ஒருவருக்கு பிழையாக செலுத்தியிருந்த சம்பளம் ரூபா 74,070 தொகையொன்று உட்பட ரூபா 192,164 தொகை அறவிட வேண்டிய முற்பணம் பீ கணக்கில் சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு சென்றிருந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் என வெளிப்படுத்தப்பட்டிருந்தது.<br>பிழையான முறையில் சம்பளம் செலுத்தல் மேற்கொண்டவர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையாக செலுத்தியிருந்த ரூபா 74,070 தொகையினை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இடர்கடன் மீதி ரூபா 188,414 தொகை மற்றும் விழா முற்பணம் ரூபா 3,750 தொகை என மொத்தக் கடன்மீதி ரூபா 192,164 தொகை என முற்பணம் பீ கணக்கிற்கு அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அந்த கடன்மீதியை தவறுதலாக இணக்கக் கூற்றில் சம்பளமற்ற விடுமுறை பெற்று வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன்மீதி என குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் பதிவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சம்பளம் செலுத்துதல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், முற்பணக் கணக்குகளின் பதிவுகள் சரியாக உட்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

#### 1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குத் திணைக்களத்தினால் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக வழங்கியுள்ள அறிவுரைகளின் படி குறிப்பீட்டு இலக்கம் 61414 இன் கீழ் குளங்கள் நீர்த்தேக்கங்கள் அறுவிகள் என்பனவற்றை நிதியல்லாத சொத்துக்கள் என இனங்கண்டு | அரச கணக்குத் திணைக்களத்தின் சுற்றறிக்கை மூலம் வழங்கியிருந்த அறிவுரைகளின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது செலவு விடயம் 2105 இன் கீழ் அதாவது காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி செய்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மாத்திரம் நிலையான சொத்துக்கள் | குளங்கள் நீர்த் தேக்கங்கள் அறுவிகள் ஆகியவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட மூலதனத் தன்மையுள்ள செலவுகள் அறுதியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும், 2021 ஆண்டின் போது ரூபா 661,112,174 தொகை செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட குளங்கள் நீர்த்தேக்கங்கள் அறுவிகள் ஆகியவற்றை அறுதியாக இனங்கண்டு நிதியல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. | என பொருட் பதிடுவேட்டில் பதியப்பட வேண்டும் என்பதாகும். எனினும் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 661,112,175 இற்கான தொகை வேறு செலவு விடயங்களின் கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அரச கணக்குத் திணைக்களத்தின் ஆலோசனை பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2017 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 185,043,180 தொகைக்கான கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிலையத்தின் புதிய அலுவலகக் கட்டிடத்தை நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | தற்போது எமது திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கியுள்ள உரிமையை உறுதிப்படுத்தப்பட்ட கட்டிடங்கள் மாத்திரமே. இந்த கட்டிடத்தின் கிரயத்தை இனங்கண்டு உரிய முழுப் பெறுமதியும் 2022 ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | திணைக்களத்திற்கு சொந்தமான ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிதியல்லாத சொத்துக்கள் தனதாக்கல் தொடர்பாக ரூபா 5,597,916,828 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் திறைசேரி பதிவு (SA-82) படி ரூபா 3,684,007,764 தொகை பெறுமதியாகும். அதன்படி ரூபா 1,913,909,064 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | யான் ஓயா செயற்திட்டத்திற்காக 2021 ஏப்ரல் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,024,867,733 இற்கான செலவு மற்றும் களு கல் ஓயா செயற்திட்டத்தின் 2021 பெப்ரவரி வரை மேற்கொள்ளப்பட்ட செலவாகிய ரூபா 38,199,520.67 தொகை வித்தியாசம் என அவதானிக்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களின் கணக்கீட்டு அலகுகள் இரண்டும் 2021 ஆண்டின் போது மூடப்பட்டது. அதன் காரணமாக 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவு ஆரம்ப மீதியொன்றென அரச நிதித் திணைக்களத்தின் அறிவுரையின் படி செயற்படுத்தப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் திறைசேரிப் பதிவுகளின் தரவுகளை இணக்கஞ் செய்து சரியான பெறுமதி காட்டப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியளவில் திணைக்களத்தின் வலய பணிப்பாளர் அலுவலகங்களில் மற்றும் பிராந்திய பொறியியலாளர் அலுவலகங்களில் 4,735 ஏக்கர் 123 பர்சஸ் காணி மற்றும் பண்டாரவெல, காலி, கண்டி, பொலன்னறுவ, மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் அமைந்துள்ள | இந்த காணிகள் மற்றும் கட்டிடங்களை கூடிய விரைவில் பெறுமதி மதிப்பீடு செய்து தரும்படி பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதங்கள் அனுப்பட்டுள்ளதுடன், அரச கணக்குத் திணைக்களத்தின் இலக்கம் SA/GFS/01/01/01-volume xi மற்றும் 2022.05.26 திகதிய கடிதத்தின் மூலமும் குறிப்பிட்ட | திணைக்களத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 392 கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்து நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் படி பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. அந்தத் திணைக்களம் இந்த ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்தவுடன், இந்த காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் படி நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 92,494,173,747 தொகை எனினும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் படி ஆரம்ப மீதி என ரூபா 95,644,387,556 தொகை காட்டப்பட்டிருந்தது. இதன் படி ஆரம்ப மீதியில் ரூபா 3,150,213,809 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. ஆரம்ப மீதிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கல்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | மிகையாக காட்டப்பட்டிருந்த ஆரம்ப மீதியில் காட்டப்பட்டுள்ளது ஆண்டின் போது நீர்ப்பாசன திணைக்களத்திற்காக ஏனைய திணைக்களங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,063,672,253 தொகையினுள் மேற்கொள்ளப்பட்ட சில செலவுகள் பிழைகளை சரி செய்யும் போது ஆரம்ப மீதி என காட்டப்பட்டிருந்ததனாலே ஆகும். திறைசேரிக் கணக்குகள் மற்றும் திணைக்கள ஏடுகள் இடையே இந்த மீதிகளின் சமமின்மை தொடர்பாக அரச கணக்குத் திணைக்களத்திடம் விசாரணை செய்ததுடன் 2022 ஆண்டின் பின்னர் இந்த மீதிகளின் சமமின்மைகள் சரியாக மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. | திணைக்களக் கணக்குகள் மற்றும் திறைசேரி கணக்குகள் இடையே சரியாக பதிவுகள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கட்டுநிதிக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஆண்டின் போது திணைக்களத்தின் பொறியியலாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த வாகன விபத்து ஒன்று தொடர்பாக இரண்டு வழக்குத் தீர்ப்புகள் தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திடம் அறவீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,608,100 இற்கான தொகையொன்று 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, குறிப்பிட்ட ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 3,908,100 இற்கான தொகையில் பணமாக தீர்க்கப்படாத கட்டுநிதி மீதி ஒன்றென நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. 2018 முதல் 2021 வரையான 03 வருட காலப் | திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி உரிய நட்டத்தை பதிவழிப்பதற்காக நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரிடம் 2022 ஜூன் 09 திகதி கடிதத்தின் மூலம் அங்கீகாரம் கேட்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டியுள்ள தொகைகள் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடப்பட வேண்டியதுடன் அவ்வாறு மேற்கொள்ளாத உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் ஓய்வூதியத்தில் இருந்து அறவீடு செய்வதற்கான இயலுமையை கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பகுதியில் அந்த உத்தியோகத்தரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்படக் கூடியதாக இருந்த தொகையினை அறவிட்டிருக்காததுடன் அவரின் ஓய்வூதியத்தில் இருந்து மாதாந்தம் ரூபா 10,000 தொகை போன்ற தொகையினை அறவீடு செய்வதற்கு திணைக்களத்தினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தின் காரணமாக அந்த காலப் பகுதியில் அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 300,000 மாத்திரம் ஆகும். 2021 ஆகஸ்ட் மாதத்தில் குறிப்பிட்ட உத்தியோகத்தர் இறந்திருந்த காரணத்தினால் மேற்கூறிய தீர்க்கப்படாத கட்டுநிதி மீதியை அறவிடப்பட முடியாமல் இருந்ததுடன், அந்த மீதியை பதிவழிப்பதற்காக திணைக்களத்தினால் நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரிடம் அங்கீகாரம் வேண்டியிருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை இனங்காணாமல் ஒதுக்கம் மேற்கொள்ளல் மற்றும் திட்டமிட்டவாறு வேலைகள் செய்யப்படாமை ஆகிய காரணங்களினால் ரூபா 14,668,500,000 தொகைக்கான தேறிய ஒதுக்கங்களில் இருந்து ரூபா 2,930,772,857 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. பாதீட்டின் மூலம் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதி செலவு விடயத்தின் கீழ் 05 அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் முழுமையாக பயன்படுத்தாமல் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களுக்காக 50% இற்கு மிகையான தொகையொன்று மாற்றப்பட்டிருந்தமையால், திட்டமிடப்பட்டிருந்தவாறு அந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | வெள்ள ஆபத்துக்களை குறைக்கும் செயற்திட்டம் 2021 ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனுக்கான தொகை ஏற்பாடுகள் குறிப்பிட்ட கருமங்களை பூர்த்தி செய்வதற்கு இயலாமல் போனமையால் 1,000 மில்லியனுக்கான ஏற்பாடுகள் மாற்றப்பட்டது. கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம், வடமராட்சி கடலேறிக்கு நீர் வழங்கும் செயற்திட்டம் சஹா தெமடகல குள புனர்நிர்மாண செயற்திட்டம் ஆகியவற்றின் ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்வதில் தாமதம் அடைதல், திட்டமிட்ட பெதியாகொட பம்புநிலையம் நிர்மாணிப்பதற்காக பெறுகை அலுவல்கள் 2021 ஆண்டின் பொது பூர்த்தி செய்ய முடியாமல் போனமை ஆகிய காரணங்களாகும். | செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டவாறு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புகளுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குச் சுற்றறிக்கை 255/2017 02(d) இன் பிரகாரம் நிதியாண்டிற்கான கொடுப்பனவுகள் அந்த நிதியாண்டிலேயே விடுவிக்கப்பட வேண்டியிருந்ததுடன், பொறுப்புக்கள் எதுவும் அடுத்த ஆண்டில் தீர்த்துக் கொள்ளும் குறிக்கோளுடன் முன்கொண்டு செல்லக் கூடாது என வழங்கியிருந்த ஆலோசனைகளுக்கு முரணாக ஏற்படுத்திருந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்காக திறைசேரி தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்காதென ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,689,409,606 இற்கான பொறுப்புக்கள் அவதானிக்கப்பட்டது. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,689,409,606 பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்தது கட்டுநிதிகள் இன்மையாகும். | அரச கணக்குச் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இணங்க பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக திணைக்களத்திற்கு கிடைத்திருந்த ரூபா 4,194,430 இற்கான தொகை குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தாமல் பல வருட காலம் முதல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2021 ஜனவரி முதல் செப்தெம்பர் வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 47,900 இற்கான முத்திரைக் கட்டணம் திருகோணமலை வலயத்திற்கு உரியதாக காணப்பட்டதுடன், தற்போது உள்நாட்டு இறைவரித் திணைக்கத்திற்கு அனுப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | நுவரெலிய பிராந்திய அலுவலக ஊழியர் ஒருவர் 2020 திசெம்பர் மாதத்திற்குரிய இடர்கடன் மீதியை தீர்ப்பதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 155,207 தொகை முற்பணம் பீ கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக வைப்புக் கணக்கிற்கு பதியப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவு ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றும் தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அந்த முறைமையில் வெற்றிகரத் தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு மேற்கொண்டு அதன்படி முறைமை வெற்றிகரமாக எடுத்துச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தெரிவிக்கப்பட்ட கருத்துகள் பந்திக்கு பொருத்தமானவையாக இருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட மீளாய்வுக் கூட்டங்களின் அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 285 ஆம் அத்தியாயத்தின் பிரிவு 64 | நீர்ப்பாசன திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் பிரதான மற்றும் மத்திய அளவிலான நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆற்று வடிநிலம் நீர்ஏந்துகள் மற்றும் காப்பு நிலங்களின் பாதுகாப்பிற்காக, அங்கீகாரமற்ற நிர்மாண | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பிரதான மற்றும் மத்திய அளவிலான நீர்த் திட்டங்கள், பிரதான ஆற்று வடிநிலங்கள், நீர்ஏந்து மற்றும் காப்பு நிலங்களின் | கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேலைகள் மற்றும் பயிர்செய்கை அலுவல்கள் கட்டுப்பாடு, நீர் மாசடைவதை தடுத்துக் கொள்ளல், அங்கீகாரம் இன்றி நீரை பயன்படுத்துவதை கட்டுப்படுத்தல், நீர்ப்பாசனத் திட்டங்கள் பராமரிப்பு தொடர்பாக முறையான ஒழுங்குருத்தல் மேற் கொள்வதற்கு தேவையான மூலப் பிரமாணங்கள் வெளியிட்டிருக்கவில்லை. | பாதுகாப்புக்காக ஆற்று உதவி முகாமைத்துவ பிரிவு ஆறுகளை அளவை செய்து ஆறுகளின் கட்டமைப்பு தொடர்பான தரவுகள் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆறுகள் மாசடைவதற்கு காரணமான பிளாஸ்டிக், பொலித்தீன் ஆகிய திண்ம கழிவுப் பொருட்களை அகற்றுதல், ஆறுகள் மாசடைவதற்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்காக குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்துதல், நீர் மாசடைந்த ஆறுகளுக்கு ஏற்பட்டுள்ள உண்மையான நிலைமைகளை வெளிப்படுத்தி மற்றும் சரி செய்யப்பட வேண்டிய முறையினை தெளிவுபடுத்துவற்காக குறுகிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு குறிப்பிட்ட பிரஜைகள், உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகளை அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2017 ஜூலை 18 திகதிய அமப/17/1456/729/017 இலக்கங் கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் | கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிலையத்தில் சர்வதேச மட்டத்திலான பயிற்சிப் பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்துவதற்காக 2017 ஆண்டின் போது அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் கடந்த 05 வருடங்களிலும் சர்வதேச மட்டத்திலான பயிற்சிப் பாடநெறிகள் ஏதும் நடாத்தியிருக்கவில்லை. | தாய்லாந்தின் ரஜமங்கல பல்கலைக்கழகத்துடன் இணைந்து சர்வதேச பயிற்சி பாடநெறி ஒன்று 2019 ஜூன் மாதத்தில் நடாத்தப்பட்டது. 2019.06.17 திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 4/2019 மூலம் உள்நாட்டு நிதியங்களின் மூலம் செலவுகள் மேற்கொண்டு கருத்தரங்குகள்/ செயலமர்வுகள் நிறுத்தப்பட்டமையால் சர்வதேச நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV பிரிவுகள் 4.4 மற்றும் 4.5 | இருபத்துமூன்று இறந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,751,438 தொகை, 83 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 9,013,134 தொகை மற்றும் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம், சேவையை விட்டுச் சென்றிருந்த உத்தியோகத்தர்களிடம் மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 2,522,087 தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த மீதிகளில் மூன்று வருடங்களை விட பழமை வாய்ந்த ரூபா 2,521,332 கடன்மீதி ஒன்று மற்றும் ஐந்து வருடங்களை கடந்துள்ள ரூபா 1,294,985 இற்கான கடன்மீதி ஒன்றும் காணப்பட்டது. | மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2015 ஜூலை 14 திகதிய 03/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | ஏதாவது விஷேட கருமம் ஒன்றிற்காக நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்ச வரையறை வரை நிமித்தக் கட்டுநிதி வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முடியும். 2021 ஜனவரி முதல் ஜூலை வரை காலப்பகுதியில் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 வீதம் முற்பணங்கள் செலுத்தி இருந்ததுடன் அந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முற்பண தொகையை மிகைத்து ரூபா 118,838 தொகை செலவிடப்பட்டிருந்தது. | எனது CFO/FIN/001/2021 இலக்க மற்றும் 2021.02.24 திகதிய நி.பி.135 அதிகாரக் கையளிப்பின் படி நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு ரூபா 100,000 முற்பணம் வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2.6 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்கமுவ பயிற்சி நிலையத்தின் சமையலறைக்கு சமையற்காரார் பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த அமைய தொழிலாளர்கள் இருவருக்கு 2021 ஆண்டில் சம்பளம் செலுத்துவதற்காக 2021 ஜனவரி 29 திகதி ரூபா 1,000,000 இற்கான ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பயிற்சிப் பாடநெறிகளுக்குரிய மதிப்பீடு தயாரிக்கும் போது ஒரு சமையற்காரருக்குரிய நாளாந்த சம்பளம் என ரூபா 1,850 வீதம் இரண்டு சமையற்காரருக்குமாக அந்த நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்ற நாட்களின் எண்ணிக்கையின் படி சம்பளம் உட்படுத்தப்பட்டு பணம் பெறப்பட்டிருந்ததுடன், அந்தத் பணத்தையும் செலவழித்திருந்தது. திணைக்களத்தினால் ஊழியர் சம்பளம் மற்றும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு செலுத்தியிருக்கும் போதிலும் செயலமர்வுகளுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள், சாரதிகள், உதவியாளர்கள், சமையலறை ஊழியர்கள், அலுவலக உதவியாளர்களுக்காக மேலதிகநேர வேலை என பெறுமதியையும் மதிப்பீட்டில் உட்படுத்தி பணம் பெற்றுக்கொள்ளப்பட்டு இருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சமையற்காகரர் ஒருவருக்கான பதவி ஒன்று காணப்படாமையால் அமைய பயிற்சி தொழிலாளர்கள் அவ் விடயத்திற்காக சேர்க்கப்பட்டிருந்தது. 05 நாட்களுக்கு அல்லது அதை விட மிகையான காலம் ஒன்றிற்காக தொடர்ந்து நடைபெறும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக காலை பகல் இரவு உணவு வழங்கும் போது அந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடைபெறும் காலப் பகுதியில் மாத்திரம் சமையற்காரரின் கடமைக்காக மேலதிக பயிற்றப்பட்ட தொழிலாளர் இருவருக்கு நாளாந்த வேதனம் செலுத்தும் அடிப்படை மீது சேவையில் ஈடுபடுத்தப்படுவதுடன் அந்தத் தொழிலாளர் சம்பளங்கள், நிறுவனத்தின் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள், சாரதிகள், உதவியாளர்கள், சமையலறை ஊழியர்கள், அலுவலக உதவியாளர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்துவதற்காக ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்காமையால் பயிற்சி பாடநெறியின் மதிப்பீட்டில் உட்படுத்தப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 128 ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். |
| (ஆ) | தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி பயிற்சி நிதியத்திற்கு இணைக்கப்பட்டுள்ள முழுநேர அடிப்படையில் கடமையாற்றும் கல்விப் பதவியணியில் பொறியியலாளருக்கு மற்றும் பொறியியல் உதவியாளருக்கு வேறேதும் படிகள் செலுத்தப்படமாட்டாது என்ற அடிப்படையின் மீது அவர்களின் படிகள் இன்றி மாதாந்தச் | ஏற்றுக் கொள்கிறேன். 2022 பெப்ரவரி மாதம் முதல் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி படிகள் செலுத்துதல் மேற்கொள்ளக் கூடாது. அங்கீகாரமின்றி செலுத்தப்பட்ட படிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| சம்பளத்தில் 20 சதவீத கொடுப்பனவு ஒன்று மேற்கொள்வதற்காக பணிப்பாளரினால் 2011 ஜனவரி 04 திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி திணைக்களத்தினால் 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான 05 வருட காலப்பகுதியுள் ரூபா 5,273,189 தொகைக்காக கல்விக் கொடுப்பனவு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. | | |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை பெற்றுக் கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| யான் ஓயா நீர்த்தேக்கம் நிர்மாணித்த காரணத்தினால் இழந்த காடுகளுக்கு பதிலாக மீண்டும் காடு வளர்ப்பதற்காக அனுராதபுர மாவட்ட வன அலுவலகத்திற்கு ரூபா 12,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன்படி அனுராதபுர மாவட்டத்தில் 209.1 ஹெக்டயர் பகுதியில் 200000 கன்றுகள் வளர்க்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு இலட்சம் கன்றுகள் மாத்திரம் நடப்பட்டிருந்தது. நீர்த்தேக்கத்தில் FSL மற்றும் HFL மட்டத்திடையே அமைந்துள்ள காணிகளின் பொருத்தமான தன்மை தொடர்பாக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளாமல் கன்றுகள் நடப்பட்டிருந்தமையாலும் செயற்திட்ட சுற்றாடல் அறிக்கையின் தாக்க மதிப்பீட்டு தேவைப்பாட்டிற்கு இணங்கி பயிர்செய்கை மேற்கொள்ளப்படாமையால், நீர்த் தேக்கத்தில் நீர் நிரம்பும் போது அப் பகுதி நீரினால் மூழ்கப்படுவதனால் நடப்பட்ட கன்றுகளில் 90 சதவீதத்துக்கு அதிகமான எண்ணிக்கையானவை அழிவடைந்திருந்தன. | அனுராதபுர மாவட்ட வன அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட தொகையில் பயிர்செய்கைக்கான கன்றுகள் உற்பத்தி செய்வதற்காக யான்ஓயா நீர்த்தேக்கத்துக்கு அண்மையில் காணிப் பகுதி ஒன்று ஒதுக்கப்பட்டு வன பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் கன்று நாற்று மேடைகள் ஆக்கப்பட்டு 110,000 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.<br><br>இங்கு யான்ஓயா நீர்த் தேக்கத்திற்கு அண்மையிலுள்ள நாற்றுமேடையில் உற்பத்தி செய்யப்பட்ட 100,000 கன்றுகள் அதிகமழை காரணமாக இந்த கன்றுகள் நடப்பட்ட பகுதி நீரினால் மூழ்கடிக்கப்பட்டதுடன் சுமார் 02 வாரங்கள் காலம் நீர் தங்கியிருத்தல், மாடுகள் புல் மேய்வதற்காக வழமையாக இவ் இடங்களுக்கு அனுப்பப்படுதல், வன பயிர்ச் செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக 03 வருடங்களுக்கு அத்தியவசியமான பராமரிப்பு அலுவல்களுக்காக ஏற்பாடுகள் செயற்திட்டத்தின் மூலம் வழங்குவதற்கு முடியாமை ஆகிய காரணங்கள் ஆகும். | சுற்றாடல் தாக்கங்கள் மதிப்பீட்டு அறிக்கையில் மூலப் பிரமாணங்களை கவனத்தில் எடுக்காமல் கவனயீனமாக செயற்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.1.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
